Friday, February 04, 2011 8:49 AM IST

**விலைவாசி உயர்வு: அமைச்சரவை ஆலோசனை**

First Published : 04 Feb 2011 01:28:52 AM IST

புது தில்லி, பிப்.3: அத்தியாவசியப் பொருள்களின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்துள்ளது குறித்து விலைவாசிக்கான மத்திய அமைச்சரவைக் குழு தில்லியில் வியாழக்கிழமை கூடி ஆலோசனை நடத்தியது.

÷பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் பலர் கலந்து கொண்டனர். விலைவாசியைக் கட்டுப்படுத்த இந்த கூட்டத்தில் என்ன என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பது குறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

÷நாட்டில் உணவுப் பணவீக்கம் 17 சதவீதத்தை தாண்டியுள்ளது. பால், காய்கறிகள், பழங்கள், வெங்காயம், முட்டை என மக்கள் அன்றாடம் வாங்கி உபயோகிக்கும் அனைத்துப் பொருள்களின் விலையும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. வெங்காயத்தை பார்க்க மட்டுமே முடியும், எளிதில் வாங்க முடியாது என்ற நிலைக்கு ஏழை, நடுத்தர மக்கள் தள்ளப்பட்டனர்.

விலை உயர்வு குறித்து மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ள நிலையில், விரைவில் விலை குறையும் என்ற வசனத்தையே மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியும், வேளாண்துறை அமைச்சரும் சரத் பவாரும் மாறி மாறிக் கூறினர்.

இவ்வளவு நடைபெற்ற பின் இப்போதுதான் மத்திய அமைச்சரவைக் கூடி விலை உயர்வு குறித்து விவாதித்துள்ளது. இதன் பிறகாவது இப்பிரச்னைக்கு விடிவு பிறக்குமா என்பது வரும் நாள்களில்தான் தெரியவரும்.

**கரும்பு தோகையை உரமாக்குவது எப்படி?**

தே. சாலமன்

First Published : 03 Feb 2011 12:06:24 PM IST

செய்யாறு: கரும்பு தோகையை எரிக்காமல் அதை உரமாக்கி பயன்படுத்தும் முறை குறித்து வேளாண் துறையினர் யோசனை கூறியுள்ளனர்.

கரும்பு அறுவடைக்குப் பிறகு பெரும்பாலான விவசாயிகள் கரும்பு தோகையை வயலிலேயே எரித்து விடுகின்றனர். இதனால் ஒரு ஹெக்டேருக்கு 25 டன் இயற்கை எரு வீணாகிறது.

எருவின் மூலம் கிடைக்கக் கூடிய 100 கிலோ தழைச்சத்து (220 கிலோ யூரியாவுக்கு சமம்) 50 கிலோ மணிச்சத்து (315 கிலோ சூப்பர் பாஸ்பேட்டுக்கு சமம்), கந்தகச் சத்துகள் கிடைப்பதில்லை. மேலும் மறுதாம்பு கரும்பின் முளைப்புத்திறன் 30 சதவீதம் குறைகிறது. வளர்ச்சியும் தடைபடுகிறது.

மண்ணில் வாழும் நுண்ணுயிரிகள், மண்புழுக்கள் அழிக்கப்படுகின்றன. எரிப்பதால் ஏற்படும் புகையால் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. எனவே கரும்புத் தோகையை எரிக்காமல் உரமாக்கி நிலத்தை வளப்படுத்தலாம்.

உரமாக்கும் முறை:

கரும்பு வயலின் ஒரு மூலையில் 9ஷ்5ஷ்1 மீட்டர் அளவில் குழி எடுக்க வேண்டும். அக்குழியில் 500 கிலோ கரும்பு தோகையினை போட வேண்டும். அதன் மேல் வயல் மண் (அ) கரும்பு ஆலைக்கழிவு (பிரஸ்மட்) 500 கிலோவை இட்டு, அதன் மேல் 10 கிலோ பாறை பாஸ்பேட், 10 கிலோ ஜிப்சம் மற்றும் 5 கிலோ யூரியா கலவையை தூவ வேண்டும். மேற்கூறிய அனைத்தும் நன்கு நனையும்படி நீர்த் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு உருவாக்கிய அடுக்கின் மேல் மாட்டுச்சாணம், மக்கிய எரு மற்றும் வயல் மண் கலந்த கரைசலை 500 லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். இவ்வாறாக குழி நிரம்பும் வண்ணம் 10 முதல் 15 அடுக்குகள் இடுவதன் மூலம் 5 டன் கரும்பு தோகையை உரமாக்கலாம்.

இறுதியாக உரக்குழியை நில மட்டத்துக்கு மேல் அரை அடி உயரம் மேடாகும் வண்ணம் மண் கொண்டு மெழுகி மூடிவிட வேண்டும்.

மூன்று மாதங்கள் கழித்து குழி முழுவதையும் நன்கு மக்குமாறு கலக்கிவிடவேண்டும். மக்கும் எரு நன்கு நனையுமாறு வாரம் ஒருமுறை நீர்த் தெளித்து பராமரித்தால் ஆறு மாதத்துக்குள் மக்கிய கரும்பு தோகை உரம் தயாராகிவிடும். இதை எல்லா பயிர்களுக்கும் பயன்படுத்தி நல்ல பயன் பெறலாம் என செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவுத்துள்ளார்.

**சோற்று கற்றாழை பயிரிட்டு அதிக லாபம் பெறலாம்**

நமது நிருபர்

First Published : 03 Feb 2011 12:05:43 PM IST

அரக்கோணம்: மூலிகை பயிரான சோற்றுக்கற்றாழையை இங்கிலாந்து உள்ளிட்ட வெளிநாடுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது. எனவே சோற்றுக்கற்றாழை பயிரிட்டு அதிக லாபம் ஈட்டலாம்.

சோற்றுகற்றாழை வறட்சியான பகுதிகளுக்கு ஏற்ற பயிராகும். பல்வேறு அழகுசாதனங்கள், மருந்து பொருள்கள் தயாரிப்பதற்கு இது பெரிதும் பயன்படுகிறது. இந்தியாவில் ராஜஸ்தான்,

ஆந்திரம், குஜராத், தமிழ்நாட்டில் சேலம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இது பெருமளவில் பயிரிடப்படுகிறது.

3 வகை கற்றாழை: குர்குவா கற்றாழை, கேப் கற்றாழை, சாகோட்ரின் கற்றாழை என கற்றாழையில் மூன்று வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் பயிரிடப்பட்டு வருவது குர்குவா கற்றாழை.

வறட்சிப் பிரதேசங்கள் மற்றும் கடல் மட்டத்தில் இருந்து 4 ஆயிரம் அடி உயர மலைபிரதேசங்களிலும் இது பயிரிடப்படுகிறது. இதன் இலைகள் தடிமனாகவும், சிறிது சிவப்பு கலந்து பச்சை நிறத்தில், 30 முதல் 60 செ.மீ. நீளமாக சிறிய முட்களுடன் இருக்கும்.

தரிசுமண், மணற்பாங்கான நிலம், பொறைமண் போன்றவை இதற்கு ஏற்றது. எனினும் எல்லா வகையான மண்ணிலும் கற்றாழையை சாகுபடி செய்யலாம். நல்ல வடிகால் வசதியுடன் கூடிய மணற்பாங்கான நிலம் மிகவும் ஏற்றது.

நடவு: தாய்ச்செடியில் இருந்து ஒன்று அல்லது இரண்டு வயதுடைய பக்கக்கன்றுகளை பிரித்து நடவுக்கு பயன்படுத்த வேண்டும். ஒரே அளவுள்ள கன்றுகளை தேர்ந்தெடுத்தல் முக்கியம். இதனால் செடிகள் சீராக வளர்வதுடன் ஒரே சமயத்தில் அறுவடைக்கு வரும்.

கற்றாழையை தனிப்பயிராக பயிரிடும்போது ஹெக்டேருக்கு 10 ஆயிரம் கன்றுகள் தேவைப்படும். இப்பயிரை வருடத்துக்கு இரண்டு பருவங்களில் பயிரிடலாம். ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடவு செய்யலாம். இலைகள் முற்றும் தருவாயில் ஓரளவு வறட்சியான தட்பவெப்பம் இருக்க வேண்டும். இதனால் இலையில் தரமான கூழ் கிடைக்கும்.

நிலத்தை இரணடு முறை உழுது, ஹெக்டேருக்கு 10 டன் தொழு உரம் இட்டு, சமன் செய்து சிறிய பாத்திகளை அமைக்க வேண்டும். செடிகள் வாளிப்பாக வளர்வதற்கு செடிகளுக்கிடையே 3 அடி இடைவெளி விட்டு நடவேண்டும்.

இப்பயிருக்கு ரசாயன உரங்கள் தேவைக்கேற்ப இட வேண்டும். வளமான நிலங்களுக்கு தொழு உரம் இட்டால் போதுமானது. தரிசு மற்றும் வளமில்லாத மண்ணுக்கு செடிகளை நட்ட 20-வது நாளில் ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்து இடுவது அவசியம். ஹெக்டேருக்கு 120 கிலோ ஜிப்சத்தை அடியுரமாக இடுவது அவசியம். இதனால் கூழ் அதிக அளவில் கிடைக்கும்.

கற்றாழையில் அதிக பூச்சித் தாக்குதல், நோய்கள் தோன்றுவதில்லை.

நீர்த் தேங்கும் நிலத்தில் அழுகல் நோய் ஏற்படும். இதற்கு நிலத்தில் வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும்.

அறுவடை: நட்ட ஆறு முதல் ஏழு மாதங்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். செடிகளை வேரோடு பிடுங்கி எடுத்து, இலைகளை ஆறு மணி நேரத்திற்குள் பக்குவபடுத்துவதற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

ஹெக்டேருக்கு 15 டன் கற்றாழை இலை கிடைக்கும். இலைகளில் 80 முதல் 90 சதவீதம் நீர் உள்ளதால் விரைவாக கெட்டுவிடும். இதனால் அறுவடை செய்த உடனே இலைகளை பக்குவப்படுத்தி அவற்றில் இருந்து கூழை பிரித்தெடுக்க வேண்டும்.

அரக்கோணம் வட்டம், தண்டலம் ஊராட்சி கேசவபுரத்தை சேர்ந்த சுரேந்தர்பாபு முதன் முதலாக 4 ஏக்கர் நிலத்தில் சோற்றுகற்றாழையை பயிரிட்டுள்ளார். கற்றாழை பயிரிட விரும்புவோர் அவரிடம் ஆலோசனை பெறலாம்.

**களர், உவர் நிலங்களை மானிய உதவியுடன் சீரமைக்கலாம்**

First Published : 03 Feb 2011 12:05:21 PM IST

வேலூர்: வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் களர் மற்றும் உவர் நிலங்களை அரசின் மானிய உதவியுடன் சீரமைக்கலாம் என வேலூர் வேளாண்மை உதவி இயக்குநர் சிவகுமார் சிங் தெரிவித்தார்.

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், ஒருசில கிராமங்களில், சாகுபடி செய்யும் நிலங்களில் களர் மற்றும் உவர் நிலப் பிரச்னைகள் காணப்படுகின்றன.

அதனால் பயிர் எண்ணிக்கை பராமரிக்க முடியாமலும், இடப்படும் எரு, உரங்கள் மற்றும் நீர் வேரினால் உறிஞ்ச முடியாத தன்மையாலும் பயிர் வளர்ச்சி குன்றியும், நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறையால் பெரும் மகசூல் இழப்பும் ஏற்படுகிறது.

என்ன செய்ய வேண்டும்?

களர் மற்றும் உவர் நிலச் சீர்திருத்தம் செய்ய நிலம் 25 முதல் 30 சென்ட் பரப்புக்குட்பட்டதாக இருக்க

வேண்டும்.

பெரிய நிலமாக இருந்தால் நடுவில் வாய்க்கால் அமைக்கலாம். நிலத்தின் சரிவுக்கு ஏற்ப வடிகால்கள் அமைக்க வேண்டும்.

வயலின் பரப்பிற்கேற்ப ஜிப்சத்தை கணக்கிட்டு பரவலாக இட்ட பிறகு சுமார் 10 செ.மீ. நீர் தேக்கி நன்கு உழவு செய்ய வேண்டும்.

நிலத்தில் தேக்கிய நீர் தானாகவே மண்ணில் ஊறி வடிகாலில் சேரும்படி செய்ய வேண்டும். இதற்கு ஓரிரு நாள்களாகலாம். மீண்டும் குறைந்தபட்சம் இதை 4 முறையாவது செய்ய வேண்டும்.

பிறகு மண்ணில் ஈரம் காய்வதற்கு முன் சணப்பு அல்லது தக்கை பூண்டை விதைத்து பூக்கும் சமயத்தில் மடக்கி உழ வேண்டும். பின்னர் வழக்கம்போல் விவசாயிகள் விரும்பும் பயிரை சாகுபடி செய்யலாம்.

மானியம்

தமிழக அரசு களர், உவர் நிலச் சீர்திருத்த திட்டத்தின் மூலம் களர், உவர் நிலங்களால் பாதிக்கப்பட்ட வயல்களில் மண் மாதிரி எடுத்து அதன் பரிந்துரை அடிப்படையில் ஜிப்சம் மற்றும் ஜிங் சல்பேட் உரங்கள் 50 சதவீத மானியத்தில் வழங்குகிறது.

மேலும் வடிகால் அமைக்க ஊக்கத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.1,000 மானியம் வழங்கப்படுகிறது.

வேலூர்

தற்போது 2010-11-ம் ஆண்டில் இத்திட்டம் வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் புதுப்பட்டு, வேடல், அன்வர்திகான்பேட்டை, கைலாசபுரம் சாலை, மின்னல், வையலாம்பாடி, சேரி ஐயம்பேட்டை, தச்சம்பட்டறை மற்றும் பெருவளையம் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டத்தில் கலசப்பாக்கம், ஒன்றியத்தில் லாடாவரம், சிறுவள்ளூர், வீரளூர், கிடாம்பாளையம், காம்பட்டு, படாகம் மற்றும் அனையாலை, சேத்துப்பட்டு ஒன்றியத்தில் பிலாசூர், கொரல்பாக்கம், கரைப்பூண்டி, மட்டப்பிறையூர் மற்றும் ராந்தம் ஆகிய கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என சிவகுமார் சிங் தெரிவித்துள்ளார்.

**உழவர்களுக்கு ஊக்கம் தரும் உளுந்து சாகுபடி**

First Published : 03 Feb 2011 12:01:05 PM IST

கடலூர்: குறைந்த காலத்தில் கணிசமான வருவாய் ஈட்டும் விவசாயமாக உளுந்து சாகுபடி உள்ளது.

நிறைந்த ஊட்டச்சத்தும் சிறந்த மருத்துவக் குணங்களும் கொண்டது உளுந்து. எனவேதான் உளுந்தின் தேவை, தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியா முழுவதுக்கும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் தமிழகம் உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்களில் உளுந்து பயிரிடப்படுகிறது. எனினும் தேவையில் 85 சதவீதத்தை பர்மா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. இந்தியாவில் 1990-91ல் 3.36 லட்சம் ஏக்கரில் 1.35 லட்சம் டன் உளுந்து உற்பத்தி செய்யப்பட்டது. 2000-2001ல் 2.75 லட்சம் ஏக்கரில் 1.32 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழகத்தில் உளுந்து உற்பத்தி பெரும்பாலும் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளையே நம்பி இருக்கிறது.

காவிரி பாசனப் பகுதிகளான சுமார் 16 லட்சம் ஏக்கரில் உளுந்து சாகுபடிக்கு அதிகம் வாய்ப்பு உள்ளது. கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 46 ஆயிரம் ஹெக்டேரில் உளுந்து பயிரிடப்பட்டது.

சம்பா நெல் அறுவடைக்கு 10 தினங்களுக்கு முன் வயல்களில் உளுந்து விதைகளை விதைத்து விடுவார்கள். வயல்களில் உள்ள ஈரப்பதம் மற்றும் பனியால் உளுந்துப்பயிர் வளர்ந்து 60 நாள்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும். இதற்குச் செலவு இல்லை. ஏக்கருக்கு குறைந்தபட்சம் 150 கிலோ வரை உளுந்து கிடைக்கும் என்கிறார்கள் விவசாயிகள்.

இந்த ஆண்டு உரிய காலத்தில் காவிரி நீர் கிடைத்து இருப்பதால் உளுந்து சாகுபடிக்கு ஏற்ற சூழ்நிலை இருப்பதாக, வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கிறார்கள்.

தமிழகத்தில் தற்போது ஏடிடி 3, டி 9, டி.ஓ.யூ.1 வண்பன் ஆகிய உளுந்து ரகங்கள் பயிரிடப்படுகின்றன.

ஏடிடி 3 டெல்டா பகுதிகளுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது.

தேவையைக் கருத்தில் கொண்டு, உளுந்தை தனிப்பயிராக சாகுபடி செய்வதற்கான நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இதுகுறித்து கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், "காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் இந்த ஆண்டு உளுந்து சாகுபடிக்கு நிறைய வாய்ப்பு உள்ளது. நஞ்சை தரிசில் உளுந்து சாகுபடி மூலம் செலவு இல்லாமலேயே ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வரை வருவாய் ஈட்ட முடியும்.

உளுந்தை தனிப்பயிராக இறவை பாசனத்தில் சாகுபடி செய்தால் 60 நாள்களில் ரூ. 30 ஆயிரத்துக்கு மேல் வருவாய் கிடைக்கும்.

எனவே உளுந்தை தனிப்பயிராக சாகுபடி செய்யவும், நேரடிகொள்முதல் செய்யவும் தமிழக அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

இதுகுறித்து வேளாண்துறை அளிக்கும் தகவல்கள்: தேசிய உணவு பாதுகாப்பு மிஷன் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட பயறு வகைகள் சாகுபடித் திட்டம் தமிழகத்தில் 2 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளன.

இத்திட்டங்களில் விருத்தாசலம், காட்டுமன்னார்கோவில் வட்டாரங்களில் தலா 1,000 ஹெக்டேரில் உளுந்து பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

மேற்கண்ட திட்டங்களில் உளுந்து விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்கள், இடுபொருள்கள், பூச்சி மருந்து தெளிக்கும் கருவிகள், சொட்டு நீர் பாசனக் கருவிகள் வழங்கப்படுகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**களர் உவர் நிலங்களை மேம்படுத்தும் வழிமுறைகள்**

First Published : 03 Feb 2011 12:00:50 PM IST

கோவில்பட்டி: களர் உவர் நிலங்களை மேம்படுத்துதல், உயிரியல் உரங்கள் இடுதல் குறித்து கோவில்பட்டி நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சரவணன் விடுத்துள்ள அறிக்கை:

களர் உவர் நிலங்களில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும், அவற்றின் செயல் திறனும் குறைந்து காணப்படும். நுண்ணுயிர்கள் போதிய எண்ணிக்கையில் இருந்தால்தான் இடப்படும் கம்போஸ்ட் மற்றும் தழை உரங்கள் சிதைக்கப்பட்டு வளரும் பயிர்களுக்கு கிடைக்கும்.

மேலும், இம் மண்ணில் இடப்படும் ரசாயன உரங்களும், பயிர்களுக்கு கிடைக்க வேண்டுமானால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை பெருமளவில் இருத்தல் வேண்டும்.

களர் நிலங்களில் நெல் சாகுபடி செய்யும் போது நெல் நடவு செய்த 10 நாள்களில் நீலப்பச்சைப்பாசி என்னும் ஒரு வகைப் பாசியை இடுவதால் நெல் பயிர் நன்கு வளரும். இப் பாசி களர் உவர் தன்மையைத் தாங்கி வளரும் திறன் கொண்டது. மண்ணின் இயக்கம் (டஎ) 7.5 முதல் 10 வரை உள்ள நிலங்களில் இது நன்கு வளரும். இந்தப் பாசியை மண்ணில் இடும்போது மண்ணிலுள்ள தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் ஈரப்பதம் ஆகியவை பாதுகாக்கப்படுகின்றன. இப் பாசி ஆக்சாலிக் அமிலம் எனப்படும் ஒரு வகை அமிலத்தை வெளியிடுகிறது.

இந்த அமிலம் மண்ணின் காரத்தன்மையைக் குறைக்க உதவுகிறது. ஒரு ஏக்கருக்கு 4 கிலோ நீல பச்சைப்பாசியை இடுவதால், அது 10 கிலோ தழைச்சத்தை மண்ணில் சேர்ப்பித்து, அதில் வளரும் நெல் பயிருக்கு கிடைக்கச் செய்கிறது. இதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூலைப் பெறலாம்.

**வாடல் நோயால் வெற்றிலை விவசாயம் பாதிப்பு**

First Published : 03 Feb 2011 12:39:51 PM IST

பரமத்தி வேலூர், பிப் .2: வாடல் நோய் தாக்குதலால், பரமத்தி வேலூர் தாலுகா பகுதியில் வெற்றிலை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

பரமத்தி வேலூர் தாலுகாவில் உள்ள காவிரிக் கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், அணிச்சம்பாளையம், பரமத்தி வேலூர், நன்செய் இடையாறு, பொய்யேரி, பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டு சாகுபடிப் பயிரான வெற்றிலை, ஒரு ஆண்டுக்குப் பிறகே பறிப்பதற்கு தயாராகும். நோய் தாக்காமல், நல்ல விலை கிடைத்தால் மட்டுமே விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும்.

ஆனால், இப்போது வெற்றிலையில் வாடல் நோய், வங்கு, மாவுப் பூச்சி, வேர் அழுகல் போன்ற நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதனால், ஏக்கர் ஒன்றுக்கு லட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து நேரில் ஆய்வு செய்த அதிகாரிகள், உரிய நிவாரணம் வழங்கப்படும் எனத் தெரிவித்தனர். ஆனால், இதுவரை வழங்கப்படவில்லை. இழப்பீடு வழங்க, மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெற்றிலை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இயற்கையைப் பாதுகாக்கும் பொருள்களை பயன்படுத்த வேண்டும்**

First Published : 03 Feb 2011 01:52:43 PM IST

உதகை, பிப். 2: இயற்கையைப் பாதுகாக்கும் பொருட்களையே பயன்படுத்த வேண்டுமென முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் ராஜீவ் ஸ்ரீவத்சவா வலியுறுத்தினார்.

உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்கம், கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மையம் ஆகியவற்றின் சார்பில் உலக சதுப்பு தினம் உதகையில் புதன்கிழமை அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற ராஜீவ் ஸ்ரீவத்சவா பேசியதாவது:

தற்போதைய சூழலில் பல்வேறு சதுப்பு நிலங்களின் நிலை மாற்றப்பட்டுள்ளது. காற்று மாசு, நீர் மாசு, ஒலி மாசு உள்ளிட்டவற்றால் சுற்றுச்சூழலும் மாசடைகிறது. அத்துடன் சதுப்பு நிலங்களை நம்பி வாழும் நீர்வாழ் உயிரினங்கள், பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட பல்லுயிர்கள் பெரிதும் பாதிப்படைகின்றன. நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் சில ஆடம்பர பொருட்கள் இயற்கையை பாதிப்படையச் செய்கின்றன.

எனவே, நாம் பயன்படுத்தும் பொருட்கள் இயற்கையைப் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்.

இயற்கையை நமது நண்பனாக நேசிப்பதோடு, ஒவ்வொரு பள்ளி மாணவ, மாணவியரும் தங்கள் குடும்பத்தினரையும் இயற்கையை நேசிக்கும் குடும்பமாக மாற்ற வேண்டுமென குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற சிபிஆர் சுற்றுச்சூழல் கல்வி மைய கள அலுவலர் குமாரவேல், சதுப்பு நிலங்கள் பல வகைகளிலும் மனிதர்களுக்கு பயனளிப்பவை எனவும், சுனாமி போன்ற பேராபத்துகள் ஏற்படும்போது மாங்குரோவ் காடுகள்தான் அவற்றிலிருந்து பாதுகாக்க முடிந்தவை என்பதால் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க வேண்டுமெனவும், ஒவ்வொரு வீட்டிலும் மூலிகைத் தாவரங்களை வளர்க்கும் மன நிலையை பெற வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

நெஸ்ட் அமைப்பின் அறங்காவலர் சிவதாஸ், சதுப்பு நிலங்கள் பல்வேறு உயிரினங்களின் வாழ்வுக்கும் ஆதாரமாக விளங்குவதாகவும், சதுப்பு நிலங்கள் அழியும்போது அவற்றிலுள்ள

உயிரினங்களும், தாவர வகைகளும் அழிந்து போவதால் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்க செயலர் ஜனார்த்தனன் பேசுகையில், நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் தனியார் கட்டுப்பாட்டிலுள்ள சதுப்பு நிலங்கள் அழியும் தருவாயில் உள்ளதாகவும் அவற்றை அரசும், மக்களும் காப்பாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய தலைவர் சிவசுப்ரமணியம், நமது முன்னோர்கள் இயற்கையைப் பாதுகாத்ததாலேயே நாம் தற்போது சுத்தமான காற்று மற்றும் நீரைப் பெறுகின்றோம் என்பதால், நமது சந்ததியினருக்கும் அத்தகைய வாய்ப்பை விட்டுச் செல்ல வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

உதகை சிஎஸ்ஐ ஜெல் மெமோரியல் பள்ளி மற்றும் சிஎஸ்ஐ மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் ஆசிரியை ஹெலினா வரவேற்றார். முடிவில் ஹெனாரின் உட் நன்றி கூறினார்.

தினமலர்

**தர்ப்பூசணி விவசாயிகளின் தாகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,00:00 IST



**திருப்பூர்:** பொங்கலூர் அருகே பெரியாரியபட்டி, தொங்குட்டிபாளையம், பெருந்தொழுவு உள்ளிட்ட கிராமங்களில் தர்ப்பூசணி சாகுபடி அதிகமாக செய்யப்பட்டுள்ளது. தர்ப்பூசணிக்கு குறைந்த அளவு நீர் இருந்தாலே போதுமானது; 10 அடி இடைவெளி பார்களில் நடவு செய்வதால் வேலை குறைவு; பராமரிப்பு செலவு குறைவு என்பதால், தர்ப்பூசணி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். "கடந்த ஆண்டு ஒரு டன் 6 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரிகள் தர்ப்பூசணியை வாங்கிச் சென்றனர். செடிகள், நோய் தாக்காமல் இருந்தால் ஒரு ஏக்கருக்கு 10 டன் வரை மகசூல் கிடைக்கும். பிஞ்சு பிடிக்கும் பருவத்தில் இருந்து வாரம் ஒரு முறை மருந்து தெளிக்க வேண்டும். இந்த ஆண்டு மகசூல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டை விட இந்தாண்டு தர்ப்பூசணிக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கிறோம்' என்கிறார் தர்ப்பூசணி விவசாயி ஒருவர்.

**அழுகிய பழங்கள் மீண்டும் விற்பனைக்கு வரும் அவலம் - ஜூஸ் விரும்பிகள், "குடிமகன்'கள், பயணிகள் உஷார்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,00:00 IST



கோயம்பேடு மார்க்கெட்டில் குப்பையில் வீசப்படும் பழங்களை, சிலர் பொறுக்கி எடுத்துச் சென்று, ஜூஸ் மற்றும் டாஸ்மாக் பார்களில் "சாலட்' தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுவதால், மக்களின் உடல் நலத்திற்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு உள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. அதில், ஆப்பிள் உள்ளிட்ட பல்வேறு ரக பழங்களை குளிர்பதன கிடங்களில் பதப்படுத்தி வைத்து தேவைக்கேற்ப வியாபாரிகள் எடுத்து விற்பனை செய்கின்றனர். மார்க்கெட்டிற்கு வரும் பழங்கள், அழுகும் போது அவற்றை மொத்த வியாபாரிகள் சிலர், தரம் பிரித்து பிளாஸ்டிக் "டிரேக்களில்' அடைத்து வைக்கின்றனர். அந்த பழங்களை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களை

சேர்ந்த ஜூஸ் வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். பழத்தில் சேதமடைந்த பகுதிகளை வெட்டி வீசி விட்டு மற்ற பகுதிகளை பயன்படுத்தி "ரெடிமேட்' ஜூஸ் தயாரித்து விற்கின்றனர். இந்த கடைகளில் குறைந்த விலையில் ஜூஸ் விற்கப்படுவதால், மக்கள் அதிகளவில் வாங்கி பருகுகின்றனர். இதே போல டாஸ்மாக் "பார்' வைத்துள்ள சிலர், சேதமடைந்த ஆப்பிள், கொய்யா, திராட்சை, அன்னாசி உள்ளிட்ட பழங்களை வாங்கிச் செல்கின்றனர். இந்த பழங்களை துண்டித்து விட்டு மற்ற பகுதிகளை சிறிய துண்டுகளாக நறுக்கி "புரூட் சாலட்' தயாரித்து விற்பனை செய்கின்றனர்.

இது தெரியாமல் இருக்க, பிளாஸ்டிக் தட்டுக்களில் பழத் துண்டுகளை வைத்து, அதன் மேற்பகுதியில் மைகா கவரை ஒட்டி, அழகுபடுத்தி விடுகின்றனர். சில சிறு வியாபாரிகள், வீசி ஏறியப்படும் பழங்களை எடுத்து கழுவி, சில்லறை மார்க்கெட் வாசலிலும், சென்னை நகரின் பிளாட்பாரங்களில் அமர்ந்து விற்பனை செய்கின்றனர். கோயம்பேடு, பாரிமுனை, தாம்பரம் உள்ளிட்ட பல்வேறு பஸ் நிலையங்களிலும் அவற்றை மைகா கவரில் அடைத்து விற்கின்றனர். கோயம்பேடு மார்க்கெட்டில் சேதமடையும் பழங்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தி குப்பை கிடங்கிற்கு எடுத்து சென்றால், இது போன்ற விற்பனையை தவிர்க்க முடியும். மார்க்கெட்டை பராமரிக்கும் சி.எம்.டி.ஏ., நிர்வாகம், இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அழுகிய பழங்களால் ஆபத்து**

அழுகிய மற்றும் சேதமடைந்த பழங்களால், வயிற்று போக்கு, வாந்தி, பேதி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படலாம். தொடர்ந்து சாப்பிடும்போது நாளடைவில் குடல் பாதிப்பு, தோல் நோய்கள் தாக்குவதற்கு வாய்ப்புள்ளதாக டாக்டர்கள் எச்சரிக்கின்றனர். கடைகளில் ஜூஸ்கள், "புரூட் சாலட்' களை சாப்பிடும் முன் அவற்றின் தரத்தை அறிந்துக் கொள்ள வேண்டும்.

**ஊட்டி மலர் செடிகளுக்கு பாதுகாப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,00:00 IST



**நீலகிரி:** ஊட்டியில், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பனியின் தாக்கம் அதிகம். இந்த ஆண்டு, இம்மாதங்களில் இங்கு ஒரு சில நாட்கள் மைனஸ் டிகிரி அளவுக்கு வெப்ப நிலை குறைந்தது. இதனால், வழக்கத்திற்கு மாறாக, ஜனவரியிலும் பனியின் தாக்கம் அதிகமாக இருந்தது. அதிகாலையில் உறை பனி பொழிந்தது. கொட்டும் பனியில் இருந்து கோடை சீசனுக்காக நடவு செய்யப்பட்ட செடிகளை பாதுகாக்க, ஊட்டி தாவரவியல் பூங்கா நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மலர் செடிகள், தொட்டிகளுக்கு, கோத்தகிரி மலர் செடிகளை கொண்டு பாதுகாப்பு வளையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் செடிகளை பனியில் இருந்து பாதுகாக்க பிளாஸ்டிக் போர்வைகள் போர்த்தப்பட்டுள்ளன. பிரதான புல்தரை பனியில் கருகாமல் இருக்க அதிகாலை நேரங்களில் "பாப் அப்' முறையில் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

**விசித்திர வாழைப்பழ விழா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,00:00 IST



**மதுரை:** கருமாத்தூர், கோவிலாங்குளம் கிராமத்தில், தந்தாண்டிதேவர் பரம்பரையில் வந்த 200 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இவர்கள், இங்குள்ள தொட்டியபிள்ளையம்மன், பட்டசாமி சுவாமிக்கு கோவில் கட்டி, கடந்த 400 ஆண்டுகளாக விழா எடுக்கின்றனர். ஆண்டுதோறும் பொங்கலன்று வாழைப்பழ திரு விழா நடக்கிறது. இவ்விழாவிற்கு ஒரு பின்னணி உண்டு. இக்கிராமத்தை சேர்ந்த மூதாதையர் பட்டயசாமி. இவருக்கு குழந்தை இல்லை.

அவருடைய நிலத்தில் கிடந்த பெண் குழந்தையை எடுத்து வளர்த்து வந்தார். அந்த பெண்ணுக்கு 15 வயதான போது, பட்டயசாமி நோய் வாய்ப்பட்டு இறந்தார். துக்கம் தாளாத அந்த பெண் தீயில் குதித்து இறந்தார். கிராமமே சோகத்தில் மூழ்கியது. அப்போது, ஒருவரின் கனவில் வந்த பட்டயசாமி, "உருவம் இல்லாமல் ஒரு கோவில் கட்டும்படியும், தைப் பொங்கலுக்கு மூன்றாம்

நாள் வாழைப்பழ பூஜை நடத்தும்படியும்' கூறினார். அது முதல் இக்கிராமத்தில் வாழைப்பழ விழா நடக்கிறது.

**நெற்பயிரில் குலைநோய் தடுப்பு முறைகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,03:23 IST

ஆழ்வார்குறிச்சி : கடையம் வட்டார விவசாயிகளுக்கு நெல் பயிரில் குலைநோய் தடுப்பு முறைகள் பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி, மேலாம்பூர் உட்பட கடையம் வட்டார பகுதிகளில் பிசான பருவத்திற்காக அம்பை16 மற்றும் கர்நாடகா பொன்னி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த ரகங்களில் குலைநோய் தாக்குதல் உள்ளது. தற்போது மேகமூட்டம், பனி, குளிர்ந்தகாற்று, குறைந்த வெப்பநிலையுடன் கூடிய சீதோஷ்ண நிலை இருப்பதால் இந்த நேரத்தில் குலைநோய் தாக்குதல் அதிகம் பரவும் வாய்ப்புள்ளது.

இந்த நோய் தாக்கிய பயிர் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறும். பின்னர் இலைகளில் காப்பி கலரில் சிறுசிறு புள்ளிகள் தோன்றும். இந்த புள்ளிகள் பெரியதாகி கண் வடிவத்தில் காணப்படும். இவைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து இலைகள் கருகி பயிர் குன்றிவிடும். கதிர் பருவத்தில் கணுவில் புள்ளிகள் தோன்றி நெல்மணிக்கு சத்து செல்வது தடைபட்டு பதர் அதிகமாகி மகசூல் இழப்பு ஏற்படும்.

இந்த குலைநோயை கட்டுப்படுத்த டிரைசைக்குளோசோல் ஏக்கருக்கு 120 கிராம் அல்லது கிட்டாசின் ஏக்கருக்கு 250 மில்லி இதில் ஏதேனும் ஒன்றுடன் ஒட்டும் திரவம் 100 மில்லி சேர்த்து தெளிக்கவும். குலைநோய் தாக்கப்பட்ட வயலுக்கு மேலுரமாக யூரியா இடுவதை தவிர்க்க வேண்டுமென கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நெற்பயிரில் இலையழுகல் நோய் தடுப்பு முறைகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,03:23 IST

ஆழ்வார்குறிச்சி : கடையம் வட்டாரத்தில் நெற்பயிரில் இலையழுகல் நோய் தடுப்பு முறைகள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. கடையம் வட்டாரத்தில் பிசான பருவத்தில் தற்போது பயிரிடப்பட்டுள்ள நெல் பயிரியில் இலையழுகல் நோய் பரவலாக காணப்படுகிறது. நெல் பயிரின்

இலைகளின் அடிப்பாகமாகிய இலையுறைகளில் நீர் கோர்த்த புள்ளிகள் தோன்றும். இவை பெரிய புள்ளிகளாக மாறி இலையழுகி சிம்புகள் அழுகிவிடும். இதனால் சிம்புகள் கதிர்விடாமல் முழுமையாக அழுகிடும். மேலும் பனி, மேகமூட்டம், குளிர்ந்த காற்று, குறைந்த வெப்பநிலையுடன் கூடிய சீதோஷ்ண நிலை நிலவுவதால் இந்நோய் அதிகம் பரவி மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நோயை கட்டுப்படுத்த கார்பன்டாசிட் ஏக்கருக்கு 250 கிராம் அல்லது டைத்தேன் எம் 45 அல்லது இசட் 78 அல்லது கெச்சாகாண்டசோல் 250 மில்லி ஒட்டும் திரவம் சேர்த்து விசை தெளிப்பான் மூலம் ஏக்கருக்கு 8 டேங்க், கைத்தெளிப்பான் என்றால் ஏக்கருக்கு 12 டேங்க் வீதம் தெளிக்கவும். தழைச்சத்து அதிகம் இடுவதை தவிர்க்கவும். மேலும் ஏக்கருக்கு 17 கிலோ பொட்டாஷ் உரம் இடவும். நீரை வடித்துவிட்டு மருந்து தெளிக்கவும். 3 நாட்கள் வரை தண்ணீர் அடைக்க வேண்டாம் என கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நெற்பயிரில் புகையான் பூச்சி கட்டுப்படுத்தும் முறைகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,03:24 IST

ஆழ்வார்குறிச்சி : நெற்பயிரில் புகையான் பூச்சியை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி கடையம் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜசேகர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடையம் வட்டாரம் கல்யாணிபுரம், மேலக்கடையம், மந்தியூர், கோவிந்தப்பேரி, ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி மற்றும் இதர கிராமங்களில் பிசான பருவத்தில் ஆடுதுறை 39 நெல் சாகுபடி செய்துள்ள பயிர்களில் புகையான் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் தென்படுகிறது.

விவசாயிகள் தொடர்ந்து செயற்கை பைரித்திராய்டு மருந்துகளை சைபர் மெத்ரின், டெல்டாமெத்ரின் மருந்துகளை அதிகம் தெளித்தாலும், பயிரை நெருங்கி நடுவதாலும், தழைச்சத்து யூரியா அதிகம் இடுவதாலும், அடியுரமாக பொட்டாஷ் இட்டதாலும் புகையான் மற்றும் பச்சை சத்து பூச்சிகள் அதிகம் பெருகி சேதம் ஏற்படுத்துகிறது.

புகையான் பூச்சிகள் இளம்பழுப்பு நிறம் உடையவை. சாம்பல் நிறத்துடனும் காணப்படும். நெல் பயிரின் அடிப்பாகத்தில் புகையான் குஞ்சுகளும், பூச்சுகளும் இருந்து கொண்டு அவற்றை உறிஞ்சுவதால் பயிர் வலுவிழந்து சாயந்துவிடும். பயிர் முதலில் மஞ்சள் நிறமாகி பின் பழுப்பு நிறமாகி புகைந்தது போல் தோற்றமளிக்கும். தாக்குதல் அதிகமானால் நெல் மணிகளில் பால்

பிடிக்காது. கதிர்கள் சாவியாகிவிடும். பயிர்கள் திட்டு திட்டாக காய்ந்து காணப்படும். தாக்கப்பட்ட பயிரின் அடிப்பகுதி பஞ்சு போல் மாறி இறுதியில் அழுகிவிடும்.

புகையான் தாக்குதல் பகுதிகளில் நெல் பயிருக்கு மீத்தைல் பாரத்தியான், குனைல் பாஸ், குளோரிபைரிப்பாஸ், டெல்டா மெத்ரின் மற்றும் சைபர் மெத்ரின் மருந்துகளை தெளிக்க கூடாது. இவைகளை தெளித்தால் புகையான் மீண்டும் அதிகளவில் உற்பத்தியாகி பெரும் சேதத்தை ஏற்படுத்தும். புகையான் தாக்கிய வயல்களில் நீரை வடித்துவிட்டு கைத்தெளிப்பான் மூலம் ஏக்கருக்கு 12 டேங்க் வீதம் பயிரின் அடிப்பாகம் நன்கு நனையும்படி இம்மிடா குளோரிபிரிட் ஏக்கருக்கு 60 மில்லி அல்லது தயோ மெத்தாக்ஸம் ஏக்கருக்கு 50 கிராம் ஒன்றுடன் 100 மில்லி ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வேளாண் உற்பத்தியாளர்களுக்கான ஒருங்கிணைப்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,01:53 IST

கோவில்பட்டி: அரசு அறிவுருத்தும் விலையில் காய்கறிகளை கொள்முதல் மற்றும் விற்பனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கான ஒருங்கிணைப்பு கூட்டம் கோவில்பட்டியில் நடந்தது.கோவில்பட்டி வேளாண் மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சார்பில் வேளாண் அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கான ஒருங்கிணைப்பு கூட்டம் நடந்தது.

இதில் சென்னை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் வெளியிட்டுள்ள உத்தரவு குறித்து தெரிவிக்கப்பட்டது. அப்போது அனைத்து கூட்டுறவு விற்பனை சங்கங்களும் காய்கறி விற்பனைக்கு உழவர் சந்தை அமைத்தல் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயி களிடமிருந்து நேரடியாக அரசு அறிவுறுத்தும் கொள்முதல் விலையில் வாங்கி அரசு அறிவிக்கும் விற்பனை விலையில் பொதுமக்களுக்கு மலிவு விலையில் காய்கறி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற உத்தரவு குறித்து அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து அரசின் அறிவுரைப்படி தரமான காய்கறிகளை நியாயமான விலையில் விவசாயிகளிடம் வாங்கவும், கூடுதல் லாபமற்ற விலையில் விற்கவும் முடிவெடுக்கப்பட்டது.கூட்டத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜகுமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரியப்பன், வெள்ளப்பாண்டி, பாலமுருகன், உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ரேவதி, காய்கறி உற்பத்தியாளர்கள் ரெங்கசாமி, தங்கையா, மாரியப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,01:27 IST

குளித்தலை: தோகமலை யூனியன் சுக்காம்பட்டியில் விதை கிராம திட்டத்தின் கீழ் நெல் விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. பஞ்சாயத்து தலைவர் மாரியாயி தலைமை வகித்தார். யூனியன் தலைவர் பாப்பாத்தி வாழ்த்தி பேசினார். வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) காதர்மொஹைதீன் வரவேற்றார். வேளாண் துணை இயக்குனர் சவுந்திரம் துறை சார்பில் செயல்படுத்தப்படும் மாநில மற்றும் மத்திய மானிய திட்டங்கள் குறித்து விளக்கினார்.

விதைச்சான்று உதவி இயக்குனர் கைலாசபதி, அலுவலர் கிருஷ்ணமூர்த்தி துணை வேளாண்மை அலுவலர் கண்ணதாசன் ஆகயோர் இயற்கை வேளாண்மை, செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து பேசினார். விவசாயிகளுக்கு அடையாள அட்டை, கைத்தெளிப்பான், உயிர் உரம், மினிகிட், நீரில் கரையும் உரம் ஆகிய இடுபொருள் மானிய விலையில் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் இளங்கோவன் செய்திருந்தார்.

## துவரையில் காய்ப்புழுக்கள் கட்டுப்படுத்த ஆலோசனை

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,04:00 IST

குஜிலியம்பாறை : மானாவாரி துவரை செடிகளில், காய்ப் புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த, வேளாண் அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

குஜிலியம்பாறையில் துவரை மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டுள் ளது.ஆடி பட்டம் விதைப்பு செய்துள்ள துவரை பயிர்கள், தற்போது நன்கு வளர்ந்துள்ள நிலையில், காய்களில் , காய்ப் (பச்சை) புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதை கட்டுப்படுத்த, ஆரம்ப கட்ட நிலையாக இருந்தால், வேப்பங்கொட்டை கரைசலை பத்து நாள் இடைவெளியில், இரண்டு முறை தெளிப்பான் மூலம் தெளிக்கலாம்.

புழுக்களின் தாக்கம் கூடுதலாக இருந்தால், ஒரு ஏக்கருக்கு, 400 மில்லி., எண்டோ சல்பான் மருந்து, அல்லது 200 மில்லி, மோ னோ குரோட்டோ பாஸ் மருந்தை தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இவ்வாறு செய்தால் புழுக்கள் கட்டுக்குள் வந்து மகசூல் அதிகரிக்குமென, வேளாண் உதவி இயக்குநர் மாணிக்கவாசகம் தெரிவித்துள்ளார்.

பால் அத்தியாவசியப் பொருள் இல்லை

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,00:56 IST

நாமக்கல்: ""ஆவின் நிறுவனம் மூலம் மட்டுமே மக்களுக்கு தரமான பால் கொடுக்க இயலும். தனியார் நிறுவனம் பாலுக்கு அதிக விலை கொடுப்பது நிரந்தரமாகாது. மேலும், பால் அத்தியாவசியப் பொருள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை,'' என, மாவட்ட கலெக்டர் மதுமதி பேசினார். நாமக்கல் எஸ்.பி.எஸ்., திருமண மண்டபத்தில், மாவட்ட பால் கூட்டுறவுச் சங்க செயலாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் மதுமதி தலைமை வகித்து பேசியதாவது: பால் கூட்டுறவு சங்க செயலாளர்கள் பணி பாதுகாப்பு, பணி நிரந்தரம், சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளனர். இக்கோரிக்கைகள் அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். தற்போதைய சூழலில், நாமக்கல் மாவட்டத்தில் மழை குறைவாக இருப்பதால், இம்மாவட்டம் வறட்சி மாவட்டமாக உள்ளது.

விவசாயத்துடன், உப தொழிலாக கால்நடை வளர்ப்பு மேற்கொண்டு, பால் உற்பத்தி செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். இச்சமயத்தில், பால் கூட்டுறவு சங்க செயலாளர்கள், கால்நடை வளர்ப்போரை ஊக்கப்படுத்தி, ஆவினுக்கு பால் ஊற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆவின் நிறுவனம் மூலம் மட்டுமே, மக்களுக்கு தரமான பால் கொடுக்க இயலும். தனியார் நிறுவனம் பாலுக்கு அதிக விலை கொடுப்பது நிரந்தரமாகாது. பால் கூட்டுறவு சங்கங்களில் முறையாக பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு, பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சரியான முறையில் நியமனம் செய்யப்படாத ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வது, அரசின் முடிவில் உள்ளது. கோரிக்கை வைப்பது மிக எளிதானது. கொள்கை ரீதியில் முடிவெடுத்து, அதை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க கால அவகாசம் தேவைப்படுகிறது. இங்கு பேசிய பலர், தங்களது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர். சத்துணவு பணியாளர்களுக்கு அரசு சலுகை செய்கிறது என தெரிவித்துள்ளீர்.

அரசின் திட்டத்தை செயல்படுத்துவதற்காக, சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு சலுகைகள் அளிக்கப்படுகிறது. மேலும், பால் அத்தியாவசியப் பொருள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. குழந்தைகளுக்கு பால் அவசியம். பெரியவர்களுக்கு பழக்கப்பட்ட ஒன்று என்பதால், அவற்றை பருகுகின்றனர். எனவே, தயவு செய்து 7ம் தேதி நடக்க உள்ள போராட்டம் தேவைதானா என சிந்தித்து, பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் கொள்முதல் செய்ய கூட்டுறவு சங்க செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். சேலம் மாவட்ட ஆவின் பொது மேலாளர் ராஜன், துணை பொதுபதிவாளர் ராஜா, ஆர்.டி.ஓ., ராமசாமி, தங்கவேல் உட்பட ஆவின் பால் கூட்டுறவு சங்க செயலாளர்கள் பலர் பங்கேற்றனர்.

**வேளாண் பல்கலை கழக கல்லூரிகளுக்கான விளையாட்டு விழா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,01:13 IST

மேலூர் : தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக கல்லூரிகளுக்கு இடையேயான ஐந்து நாள் விளையாட்டு போட்டிகள் மதுரை விவசாய கல்லூரியில் நேற்று துவங்கியது. மாணவர் மன்ற ஆலோசகர் அனந்தகுமார் வரவேற்றார். தமிழ்நாடு கூடுதல் தேர்தல் ஆணையர் அமுதா போட்டிகளை துவக்கி வைத்தார். கலெக்டர் காமராஜ் சிறப்புரை ஆற்றினார். விவசாய கல்லூரி முதல்வர் வைரவன், மனையியல் கல்லூரி முதல்வர் பானுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர். மாணவர் மன்ற ஆலோசகர் அமுதா நன்றி கூறினார். துவக்க விழாவான நேற்று வாலிபால், டேபிள் டென்னிஸ், கிரிகெட் போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றது. இப் போட்டிகளில் தமிழகம் முழுவதும் உள்ள 12 வேளாண் கல்லூரிகளை சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**சரிகிறது பூண்டு, பருப்பு விலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,21:49 IST

சிவகங்கை : நுகர்வோருக்கு கண்ணீரை வரவழைத்த வெங்காயம் விலை குறைந்ததை போல, பூண்டு விலையும் "இறங்கி' வருகிறது.

சிவகங்கையில் மளிகை பொருள் விலை விபரம்: 65 க்கு விற்ற துவரம் பருப்பு-63; 60 க்கு விற்ற 2 வது ரகம் -58; தட்டப்பயறு-56; அதில்2 வது ரகம் -48; கடலை பருப்பு-38, 2 வது ரகம் -36; உளுந்தம் பருப்பு-65, 2 வது ரகம் -63; வெள்ளை கொண்டக்கடலை -62, அதில் 2 வது ரகம் 54; 36 க்கு விற்ற சிவப்பு கொண்டக்கடலை-38, அதில் 2 வது ரகம் 32; 68க்கு விற்ற பாசி பருப்பு-70; 65க்கு விற்ற 2 வது ரகம் -66; பாசிப்பயறு-60; அதில் 2 வது ரகம் -58; மொச்சை பயறு- 48; வெள்ளை மொச்சை- 62; பட்டாணி- 22; வெள்ளை பட்டாணி- 22; 49 க்கு விற்ற மல்லி- 52, அதில் 2 வது ரகம் -45; புளி- 90; நயம்- 95; பொரி கடலை -42; வத்தல்-70, அதில் 2 வது ரகம்- 65; 240 க்கு மலைப்பூண்டு- 200; தரப்பூண்டு-130; வெல்லம் -34; கருப்பட்டி (வேம்பார்)-84; சர்க்கரை -33; சோம்பு-140; வெந்தயம் -520; கசகசா -280; சீரகம்-180; கடுகு-380; மிளகு -260; 210 க்கு விற்ற மஞ்சள் -200 ரூபாய்.

ரேஷனில் பருப்பு விலையை, அரசு குறைத்ததால் சந்தையிலும் குறைந்தது. அரிசி (கிலோ): கல்சர் பொன்னி- 31; 28 க்கு விற்ற டீலக்ஸ் பொன்னி- 27; ஐ.ஆர். 20 -20; செல்லப்பொன்னி -22;

பொன்னி பச்சரிசி -32; ஐ.ஆர்.20 பச்சரிசி- 22; 26 க்கு விற்ற இட்லி அரிசி-25; கோதுமை -24; சோளம் -16; கம்பு -18; கேப்பை -17; வரகரிசி -36 ரூபாய். எண்ணெய்: கடலை எண்ணெய் -95; பாமாயில் -65; நல்லெண்ணெய் -110, தேங்காய் எண்ணெய் -120 ரூபாய்.

**கொள்முதல் மையத்தில் குவியும் புகார் : புலம்பும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,21:45 IST

காளையார்கோவில் : மறவமங்கலம் நெல் கொள்முதல் நிலையத்தில், அடாவடி வசூல் நடப்பதாக புகார் எழுந்துள்ளது. வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்குவதாக, விவசாயிகள் புலம்புகின்றனர்.

இங்கு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. விவசாயிகளிடம் இருந்து "ஏ கிரேடு' நெல், ஒரு குவிண்டாலுக்கு 1,100 ரூபாய்; மற்ற நெல்லுக்கு 1,050 க்கு எடுக்கப்படுகிறது. சுற்றுப்புற விவசாயிகள் நெல் மூடைகளை மலைபோல் அடுக்கி வைத்துள்ளனர். மழை பெய்தால் மூடைகளுக்கு பாதுகாப்பு இல்லை. வெயிலில் கிடப்பதால் எடை குறைகிறது. நெல் பதர் நீக்கவும், எடை போடவும் பணம் வசூல் செய்வதுடன், வியாபாரிகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக, விசாயிகள் கூறுகின்றனர்.

இந்திய கம்யூ., நிர்வாகி உடையான் கூறுகையில், ""மூடைகளை இறக்கியதும் டோக்கன் வழங்குவதில்லை. பல காரணங்களை கூறி மூடைக்கு 16 ரூபாய் பிடித்தம் செய்கிறார்கள். வியாபாரிகளுக்கு தான் முன்னுரிமை. தினமும் 300 மூடைகளுக்கு மேல் எடுப்பதில்லை. பல நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது," என்றார்.

அதிகாரிகள் கூறுகையில், "விவசாயிகளிடம் இருந்து பணம் வசூலிப்பதில்லை. அரசு செலவில் எடை போடுகிறோம். பாகுபாடின்றி டோக்கன் வழங்குகிறோம். பதர் நீக்கும் இயந்திரம் பற்றாக்குறையால் குறைந்த அளவு எடுக்கப்படுகிறது. கூடுதல் இயந்திரம் வந்ததும் அதிகமாக எடுப்போம்,' என்றனர்.

கூடுதல் மையம்: இப்பிரச்னையகளை தீர்க்க காளையார்கோவில், கொல்லங்குடி, நாட்டரசன்கோட்டை, சிலுக்கபட்டி, புலியடிதம்மத்தில் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தியுள்ளனர்.

மார்க்சிஸ்ட் ஒன்றிய செயலாளர் மெய்ஞானமூர்த்தி கூறுகையில், ""விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள், 66 கிலோ மூடையை, 520 ரூபாய்க்கு எடுக்கின்றனர். எடையில் தில்லுமுல்லு செய்து, ஒரு மூடைக்கு 5 கிலோ வரை, கூடுதலாக எடுத்து விவசாயிகளை ஏமாற்றுகின்றனர். கூடுதல் நிலையங்கள் துவங்க கலெக்டர் சம்பத் முயற்சிக்க வேண்டும்," என்றார்.

**அழுகிய பழங்கள் மீண்டும் விற்பனைக்கு வரும் அவலம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,22:45 IST

கோயம்பேடு மார்க்கெட்டில் குப்பையில் வீசப்படும் பழங்களை, சிலர் பொறுக்கி எடுத்துச் சென்று, ஜூஸ் மற்றும் டாஸ்மாக் பார்களில் "சாலட்' தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுவதால், மக்களின் உடல் நலத்திற்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு உள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. அதில், ஆப்பிள் உள்ளிட்ட பல்வேறு ரக பழங்களை குளிர்பதன கிடங்களில் பதப்படுத்தி வைத்து தேவைக்கேற்ப வியாபாரிகள் எடுத்து விற்பனை செய்கின்றனர்.

மார்க்கெட்டிற்கு வரும் பழங்கள், அழுகும் போது அவற்றை மொத்த வியாபாரிகள் சிலர், தரம் பிரித்து பிளாஸ்டிக் "டிரேக்களில்' அடைத்து வைக்கின்றனர். அந்த பழங்களை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களை சேர்ந்த ஜூஸ் வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். பழத்தில் சேதமடைந்த பகுதிகளை வெட்டி வீசி விட்டு மற்ற பகுதிகளை பயன்படுத்தி "ரெடிமேட்' ஜூஸ் தயாரித்து விற்கின்றனர். இந்த கடைகளில் குறைந்த விலையில் ஜூஸ் விற்கப்படுவதால், மக்கள் அதிகளவில் வாங்கி பருகுகின்றனர். இதே போல டாஸ்மாக் "பார்' வைத்துள்ள சிலர், சேதமடைந்த ஆப்பிள், கொய்யா, திராட்சை, அன்னாசி உள்ளிட்ட பழங்களை வாங்கிச் செல்கின்றனர். இந்த பழங்களை துண்டித்து விட்டு மற்ற பகுதிகளை சிறிய துண்டுகளாக நறுக்கி "ப்ரூட் சாலட்' தயாரித்து விற்பனை செய்கின்றனர்.

இது தெரியாமல் இருக்க, பிளாஸ்டிக் தட்டுக்களில் பழத் துண்டுகளை வைத்து, அதன் மேற்பகுதியில் மைகா கவரை ஒட்டி, அழகுபடுத்தி விடுகின்றனர். சில சிறு வியாபாரிகள், வீசி ஏறியப்படும் பழங்களை எடுத்து கழுவி, சில்லறை மார்க்கெட் வாசலிலும், சென்னை நகரின் பிளாட்பாரங்களில் அமர்ந்து விற்பனை செய்கின்றனர். கோயம்பேடு, பாரிமுனை, தாம்பரம் உள்ளிட்ட பல்வேறு பஸ் நிலையங்களிலும் அவற்றை மைகா கவரில் அடைத்து விற்கின்றனர். கோயம்பேடு மார்க்கெட்டில் சேதமடையும் பழங்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தி குப்பை கிடங்கிற்கு எடுத்து சென்றால், இது போன்ற விற்பனையை தவிர்க்க முடியும். மார்க்கெட்டை பராமரிக்கும் சி.எம்.டி.ஏ., நிர்வாகம், இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அழுகிய பழங்களால் ஆபத்து : அழுகிய மற்றும் சேதமடைந்த பழங்களால், வயிற்று போக்கு, வாந்தி, பேதி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படலாம். தொடர்ந்து சாப்பிடும்போது நாளடைவில் குடல் பாதிப்பு, தோல் நோய்கள்தாக்குவதற்கு வாய்ப்புள்ளதாக டாக்டர்கள் எச்சரிக்கின்றனர்.

கடைகளில் ஜூஸ்கள், "புரூட் சாலட்' களை சாப்பிடும் முன் அவற்றின் தரத்தை அறிந்துக் கொள்ள வேண்டும்.

- எஸ். அசோக்குமார் –

**தென்னை வாரியத்தில் உறுப்பினராக சேர விண்ணப்பங்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,23:43 IST

கடலூர் : தமிழ்நாடு தென்னை நல வாரிய உறுப்பினர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வேளாண் துறையில் வழங்கப்படுகிறது. இது குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் தமிழ்நாடு தென்னை நல வாரியத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கை பணி நடந்து வருகிறது. இதில் உறுப்பினராக சேர்வதற்கு விவசாயிகள் நிலத்தில் 70 தென்னை மரங்கள் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அந்த பகுதி உதவி தோட்டக்கலை அலுவலரிடம் அல்லது கடலூர் செம்மண்டலம், குண்டுசாலை வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதனுடன் 2 பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, சிட்டா அடங்கல், குடும்ப அட்டை இணைக்க வேண்டும். மேலும் உறுப்பினராக சேர 70 முதல் 500 தென்னை மரங்களுக்கு 100 ரூபாயும், 501 முதல் 1000 வரை 200 ரூபாயும், 1001 மரங்களுக்கு மேல் இருந்தால் 500 ரூபாயும் கட்டணமாக செலுத்த வேண்டும். இவ்வாறு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கூறியுள்ளார்.

**கரும்பு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,22:53 IST

விழுப்புரம் : கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் விழுப்புரத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. கரும்பு டன்னுக்கு 3000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் விழுப்புரத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ராஜ்ஸ்ரீ ஆலை சங்க செயலாளர் சிவராமன் தலைமை தாங்கினார். கதிர்வேல், சுப்பிரமணியம், கணபதி, காசிநாதன் முன்னிலை வகித்தனர். மாவட்ட சிறப்பு தலைவர் ராமமூர்த்தி, செயலாளர்

ராதாகிருஷ்ணன், விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்பிரமணி, பெரியசெவலை கூட்டுறவு சர்க்கரை ஆலை சங்க தலைவர் ஜெயராமன் சிறப்புரையாற்றினர்.

**கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் ரூ. 1.40 கோடி "பஞ்சு' விற்பனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,22:52 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் நேற்று ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான பஞ்சு விற்பனையானது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கத்தின் மூலம் டிசம்பர் 15ம் தேதி இந்தாண்டுக்கான பருத்தி வாரச் சந்தை துவங்கியது. இந்த ஆண்டின் விற்பனை 9 கோடியே 70 லட்சம் ரூபாய் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நேற்று முன்தினம் நடந்த பருத்தி சந்தையில் 887 விவசாயிகள் கொண்டு வந்த 6,330 பஞ்சு மூட்டைகள் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஒரு குவிண்டால் பஞ்சு அதிகபட்சம் 6,012 ரூபாய், குறைந்தபட்சம் 5,279 ரூபாய் என விலை நிர்ணயிக்கப்பட்டது.

இதுவரை நடந்த பருத்தி சந்தை மூலம் மொத்தம் 3 கோடியே 18 லட்சம் ரூபாய் பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மட்டும் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான பஞ்சு விற்பனை நடந்தது.

**வேளாண் ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியருக்கு விருது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,23:02 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண் ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியருக்கு அரசு உயர்கல்வி துறை இளம் விஞ்ஞானி விருது வழங்கியுள்ளது. விருத்தாசலம் வேளாண் ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் அனிதாராணி. இவர் கடந்த 10 ஆண்டுகளாக வேளாண் தோட்டக்கலைத் துறையில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார். சர்க்கரை நோயை குணப்படுத்தும் சர்க்கரை கொல்லி தாவரத்தின் அடிப்படை ஆராய்ச்சி, அதிக காய்ப்பு திறன் கொண்ட புதிய வீரிய ரக முந்திரி, குறுகிய இடத்தில் அதிக மகசூல் செய்யும் நெருக்கு நடவுத் திட்டம் போன்ற பல்வேறு ஆராய்ச்சிகளை செய்து வருகிறார். இவருக்கு தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறையின் அறிவியல் நகரம் சார்பில் சென்னை பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மைய வளாகத்தில் நடந்த விழாவில் இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது.

உயர்கல்வி துறை முதன்மைச் செயலர் கணேசன் அனிதாராணிக்கு விருது வழங்கினார். அறிவியல் நகரத் தலைவர் பேராசிரியர் முத்துகுமரன், துணைத் தலைவர் அய்யம்பெருமாள், துணைவேந்தர் திருவாசகம், பிரபாகரன், பேராசிரியர் வின்சென்ட் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கோழிக்கொண்டை பூக்கள் விளைச்சல் அமோகம்; விலை சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,22:25 IST

பொங்கலூர் : கோழிக்கொண்டை பூக்கள் விலை சரிந்துள்ள தால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பொங்கலூர் பகுதி யில் கண்டியன்கோவில், அலகுமலை, பொங்க லூர் உள்ளிட்ட இடங் களில் கோழிக் கொண்டை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட இச்செடிகள், மழையால் கடுமையாக பாதிக்கப் பட்டன. இதனால், பூக்களின் விலை தாறுமாறாக உயர்ந்தது. விளைச்சல் பாதிக் கப்பட்டதால், விவசாயி கள் லாபம் ஈட்ட முடிய வில்லை. கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட செடிகள், தற்போது பூக்க ஆரம் பித்துள்ளன. விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை குறைந்து வரு கிறது. இது, விவசாயி கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகள் கூறுகை யில், "இது நான்கு மாத பயிராகும். ஒரு போகத் தில் ஏழு முறை பூக்கள் அறுவடை செய்யலாம். அத்துடன் செடிகள் வறண்டு விடும். கடந்த மாதத்தில் நல்ல தரமான பூக்கள் ஒரு கிலோ 100 ரூபாய் வரை விற்பனை யானது. ஆனால், பூக்கள் மழையால் பாதிக்கப் பட்டன. தற்போது பூக் கள் நன்றாக பூக்க ஆரம் பித்துள்ளன; விலையும் குறைந்து வருகிறது. ஒரு கிலோ 25 ரூபாய்க்கு விற் கப்படுகிறது,' என்றனர்.

**தென்னை விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,22:19 IST

திருப்பூர் : புதிதாக துவக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியத்தில் உறுப்பினராக சேர, விவசாயிகளிடம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தமிழ்நாடு தோட்டக்கலைத்துறையின் கீழ் தென்னை விவசாயிகள் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பம், திருப்பூர் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் வழங்கப் படுகிறது. தென்னை விவசாயிகள் வாரியத்தில் உறுப்பினராக, விண்ணப்பத்துடன் இரண்டு புகைப்படம், நிலத்தின் பட்டா, அடங்கல், சிட்டா, ரேஷன் கார்டு நகல்களை இணைக்க

வேண்டும்.தென்னை மரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பதிவு தொகை 100 முதல் 500 ரூபாய் வரை உள்ளது. தென்னைகள் 70 முதல் 500 மரங்களுக்கு 100 ரூபாய்; 500 முதல் 1000 மரங்களுக்கு 200 ரூபாய்; 1000 மரங்களுக்கு மேலாக இருப்பின் 500 ரூபாய் என பதிவுத்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள விவசாயிகள், கலெக்டர் அலுவலக வளாகத்தில் இயங்கும் தோட்டக்கலைத்துறையில் உறுப்பினராக பதிவு செய்யலாம்.

உதவி தோட்டக்கலைத்துறை இயக்குனர் அந்தோணி பால்ராஜ் கூறுகையில், ""தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில் நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. தென்னை மரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதிவு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 30 தென்னை மரங்கள் வைத்திருப்பவர்களையும் உறுப்பினராக சேர்க்க பரிசீலித்து வருகிறோம்," என்றார்.

**தக்காளி விலை சரிவு விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,22:22 IST

பொங்கலூர் : தக்காளி விலை சரிந்து வருவது, விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. பொங்கலூர் பகுதியில், காய்கறி பயிர்களில் தக்காளி சாகுபடி பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. புரட்டாசி பட்டத்தில் பயிரிடப்பட்ட தக்காளி அதிக மழைப்பொழிவால் அழிவை சந்தித்தது. அதைத்தொடர்ந்து விலை தாறுமாறாக உயர்ந்தது. நல்ல விலை கிடைத்தும் விவசாயிகளால், பயனடைய முடியவில்லை. கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி, தற்போது மார்க்கெட்டுக்கு வர ஆரம்பித்துள்ளது. இதனால், இதன் விலை படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த வாரம் ஐந்து கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி 100 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று 35 வரை விற்பனை விலை குறைந்தது. சில்லறையில் கிலோ 8 முதல் 10 வரை விற்பனையாகிறது. ஒரே வாரத்தில் விலை பாதியாக குறைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**ஆட்கள் பற்றாக்குறை: அறுவடை பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,22:20 IST

பல்லடம் : போதிய ஆட்கள் கிடைக்காததால், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.பல்லடம், சுல்தான்பேட்டை சுற்றுப்பகுதிகளில் மக்காச்சோளம் மற்றும் மஞ்சள் சோளம் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. அறுவடை பணிக்கு ஆட்கள் பற்றாக்குறையால், பணி தாமதம் அடைந்துள்ளது. கூலி அதிகரித்து கொடுத்தும் ஆட்கள்

பற்றாக்குறை இருப்பது, விவசாயிகள் இடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.கிராமப்புறங்களில் விவசாயத்தொழிலில் 50 வயதுக்கு அதிகமானவர்களே ஈடுபடுகின்றனர். இளம் வயதினர் நூற்பாலை, கட்டட வேலை, காற்றாலை உள்ளிட்ட இதர பணிக்கு செல்கின்றனர். மேலும், கிராமப்புறத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் வேலை அளிப்பது, விவசாய தொழிலுக்கு ஆட்கள் பற்றாக்குறையை அதிகரித்து விட்டது.

மக்காச்சோளம் மற்றும் மஞ்சள் சோளத்தட்டு வெட்டுவதற்கு, பெண்களுக்கு 250 ரூபாய், ஆண்களுக்கு 300 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஏக்கர் தட்டு வெட்டுவதற்கு 4,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. கூலி அதிகளவு இருந்தபோதிலும், விவசாயப்பணிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. போதிய ஆட்களின்றி, அறுவடை செய்யும் பணி தாமதம் அடைந்துள்ளது.விவசாயிகள் கூறுகையில், "அரசு கொடுக்கும் வேலை எளிமையாக இருப்பதால், விவசாய பணி செய்யும் ஆட்கள் அனைவரும் மாறிவிட்டனர். அறுவடை நேரங்களிலாவது,

விவசாயப் பணிக்கு ஆட்களை மாற்ற வேண்டும். ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, தட்டு வெட்டும் நவீன கருவிகளை பொறியியல் துறை வழங்க வேண்டும். இதே நிலை நீடித்தால், வரும் ஆண்டுகளில் விவசாயம் முற்றிலும் பாதிக்கும்,' என்றனர்.